Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 233/2022** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **ஆனந்தகுமார்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.
03.06.2026
முதல் விசாரணை:

1. நான் தற்போது பந்தல்குடியில் குடியிருந்து இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 24.03.2023 ம் தேதியன்று நான் வியாபாரம் சம்பந்தமாக உடையநாதபுரம் அருகே சென்ற போது பந்தல்குடி போலீசார் காலை 07.30 மணியளவில் வாகன தனிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரிகள் இருவரையும் விசாரணை செய்தார்கள். அவர்கள் டிராக்டரை எடுத்து வந்ததாக கூறினார்கள். டிராக்டரை காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ. 4 ஆகவும், அத்தாட்சியில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ. 5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் பந்தல் குடி காவல் நிலையத்திற்கு அருகே இரும்பு கடை வைத்திருக்கிறேன் என்றால் சரிதான். பந்தல் குடி காவல் நிலைய வழக்குகளில் நான் அடிக்கடி சாட்சி சொல்வேன் என்றால் சரிதான். டிராக்டரை யார் எடுத்துவந்தார்கள் யாரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது

என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் முன்பாக எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நான் முதல் விசாரணையில் கூறிய ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள எனது கையெழுத்துக்களை காவல் நிலையத்தில் வைத்து செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.